பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர் 5 பிரமோதூத ஆ புரட்டாதி மீ 18 உ வியாழக்கிழமை (04-10-1990) ஹிஜ்ரி 1410 ற. அவ்வல் 14 சுகிர் 211

# அம்பாறையில் ராணுவத்தால் கைதாகும் தமிழர் படுகொலை!

## கடற்கரை ஓரங்களில் சடலங்கள்

கொழும்பு, அக்டோபர் 4

அம்பாறை மாவட்டத்தில் இராணுவத்தினரால் கைது செய்யப்படும் தமிழர்கள் வெட்டியும், சுட்டும் படுகொலை செய்யப்படுகின்றனர். பின்னர் அவர்களின் சடலங்கள் கடற்கரை ஓரங்களில் வீசப்படுகின்றன.

கிழக்கு மாகாணத்தில் இருந்து விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றை மேற்கோள் காட்டி ஏஜென்ஸி செய்திகள் இத் தகவலைத் தெரிவித்தன.

கடந்த ஞாயிறு திருக்கோவில் கிராமத்தில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட 20 தமிழர்கள் பற்றி ஒன்றுமே தெரியவில்லை என்றும்—

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட தமிழர்களில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்பு — யாழ்ப்பாணம் லொறிச் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், அக். 4

கொழும்பு - யாழ்ப்பாணம் தனியார் போக்குவரத்து லொறிச் சேவைகள் மீண்டும் ஓரளவு ஆரம்பமாகியுள்ளன.

நேற்றுமட்டும் பத்துக்கும் மேற்பட்டலொறிகள்கொழும்பில் இருந்து இங்கு வந்து சேர்ந்தன.

இந்த லொறிகளில் உணவுப் பொருள்கள் மற்றும் பொது மக்களுக்கான பார்சல்கள் கொண்டுவரப்பட்டன.

இங்கிருந்து வெங்காயம் போன்றபொருள்களை தென் பகுதிக்கு ஏற்றிச் சென்று அங்கிருந்து உணவுப் பொருள்களை எடுத்துவர இருப்பதாக லொறி உரிமையாளர்கள் தெரிவித்தனர். (உ-3)

## மண்டைதீவில் மூவர் மிதிவெடியில் கால் இழப்பு

யாழ்ப்பாணம், அக். 4

மண்டைதீவில் இராணுவம் வெளியேறிச் சென்ற இடங்களுக்குத் திரும்பிய பொதுமக்களில் மூவர் நேற்று மிதிவெடியில் சிக்கித் தமது கால்களை இழந்தனர்.

தமது வீடுகளை பார்க்கச் சென்ற சாம்ஸன், அருளானந்தம் ஆகிய இருவரும் மற்றும் ஒருவருமே தமது கால்களை இழந்தனர். (உ-5)

## சாவகச்சேரி லொறி வவுனியாவில் தடுத்துவைப்பு

சாவகச்சேரியில் இருந்து பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக வவுனியா சென்ற லொறி ஒன்றை அங்குள்ள தமிழ் தீவிரவாதக் குழுவினர் தடுத்து வைத்துள்ளனர்.

லொறிச் சாரதியான ஆறுமுகம் என்பவரும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா நகருக்குள் செல்லும் வாகனங்களை சோதனையிடும் பொறுப்பை இந்தக் குழுவினரிடமே இராணுவத்தினர் ஒப்படைத்திருப்பதாகவும் தெரியவந்தது. (உ-3-5)

## அரந்தலாவையில் கண்ணி! இரு பொலீஸார் உயிரிழப்பு!!

கொழும்பு, அக். 4

பொலன்னறுவ மாவட்டம் அரந்தலாவையில் விடுதலைப் புலிகள் நடத்திய சண்ணி வெடித் தாக்குதலில் 2 பொலீஸார் உயிரிழந்தனர். 4 பொலீஸார் காயமடைந்தனர்.

கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

அநுராதபுரம் பகுதியில் பகல்கட என்னுமிடத்தில் இனந்தெரியாதோர் 40 வீடுகளுக்குத் தீ வைத்தனர் என்றும் நான்கு பேரைக் கொன்றனர் என்றும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாக இந்திய வானொலி அறிவித்தது. [உ-எ]

## 3 தமிழர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்புக்கும் தாளங்குடாவுக்கும் இடையில் வைத்து இராணுவத்தினரால் பலிங்கப்போடி லிங்கம் [வயது 18], கந்தையா விக்னேஸ்வரன் [வயது 30], குமாரசாமி யோகன் [வயது 22] ஆகிய மூவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர். [உ]

## கழுத்து நெரித்து கொலை

மட்டக்களப்பு, அக். 4

கல்முனை அட்டப்பள்ளம் தமிழ்ப் பாடசாலை அதிபரான திருமதி மங்கையற்கரசி இனந்தெரியாதவர்களால் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டார்.

கடந்த வியாழக் கிழமை மாலை வர் சயிறு ஒன்றால் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுக் கிடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது [உ-3]

## மின் இணைப்புகளை திருத்துவதற்கு முயற்சி!

யாழ்ப்பாணம், அக். 4

கிளிநொச்சியிலும் குடாநாட்டின் எல்லைப் பகுதியிலும் அறுந்துள்ள மின்கோபுர இணைப்புக்களைச் சீர் செய்வதற்காக இலங்கை மின்சார சபை ஊழியர்கள் குழு ஒன்று நேற்று முன்தினம் அப் குதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அறியவருகிறது.

132 கே வி மின் இணைப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கெப்பிற்றிக்கொலாவையில் 5 ஊர்காவலர் உயிரிழப்பு!

திருகோணமலை மாவட்டம் கெப்பிற்றிக்கொலாவையில் நேற்று முன்தினம் ஊர்காவல்படையினர்மீது விடுதலைப்புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் ஐந்து ஊர்காவலர் உயிரிழந்தனர்.

ஒரு ஷொட்கன், 303 ரைபிள்-1, தோட்டாக்கள் - 8. ரவை - 20 ஆகியன விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டன. (உ-5)

## தமிழகத்துக்கு அகதிகள் செல்வது ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், அக். 4

குடாநாட்டிலிருந்து தமிழகத்துக்கு அகதிகள் செல்வது கடந்த சில நாட்களாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

கோட்டை முகாமை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதை அடுத்தும்—

விமானத் தாக்குதல்கள் சில நாட்களாக குறைந்திருப்பதை அடுத்தும்—

அகதிகளை ஏற்றிச் செல்லும் படகுகள் மீது இந்தியக் கரையில் விதிக்கப்படும் கெடுபிடிகள் காரணமாக இந்தியாவுக்கு படகுகளை எடுத்துச் செல்ல படகுச் சொந்தக்காரர்கள் தயக்கம் காட்டுவதுமே இந்தியாவுக்கு அகதிகளாகச் செல்வதுஸ்தம்பிக்கக் காரணம். (உ-9)

## யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று துப்புரவு வேலைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், அக். 4

விமானக் குண்டுவீச்சு மற்றும் ஷெல் தாக்குதல்களினால் சேதமுற்ற யாழ் ஆஸ்பத்திரியை துப்புரவு செய்யும் பணி நேற்று ஆரம்பமானது.

முதற்கட்டமாக நேற்று ஆஸ்பத்திரியின் மருந்துக் களஞ்சியப் பகுதியை துப்புரவு செய்யும் வேலைகள் ஆரம்பமாகின.

விமானக் குண்டினால் முற்றாகத் தகர்ந்திருக்கும் மருந்துக் களஞ்சியத்தின் இடிபாடுகளுக்கிடையில் சிக்கிக் கிடக்கும் - பாவனைக்கு உதவக் கூடிய - மருந்து வகைகள் மற்றும் பொருள்களை. சேதமடையாது இருக்கும் இரத்த வங்கிக் கட்டடம் போன்ற பகுதிகளுக்கு பாதுகாப்பாக மாற்றும் பணி நேற்று இடம் பெற்றது.

யாழ் ஆஸ்பத்திரியின் வைத்திய பணிப்பாளர், நிர்வாகப் பணிப்பாளர் ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இருபதிற்கும் மேற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மயிலிட்டிக் கரைப் பகுதியில் நேற்றும் கடும் மோதல்!

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை வெளியேற முற்பட்ட இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றது. இதனையடுத்து இழப்புகளுடன் இராணுவம் முகாமுக்குப் பின்வாங்கிச் சென்றது.

அதிகாலை 5.30 மணியளவில் நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் மயிலிட்டிக் கரைப் பகுதியை நோக்கி முன்னேற முயற்சித்தனர். அதனை அடுத்து காலை 8 மணி வரை அப்பகுதியில் மோதல் நீடித்தது.

இராணுவம் முகாமுக்கு பின்வாங்கிச் சென்றதை அடுத்து மயிலிட்டி, ஊறணி, தையிட்டி போன்ற பகுதிகளை நோக்கி "ஷெல்" தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (உ-68)

## மூன்று வாரங்களில் 54 பேர் கை, கால்கள் இழந்தனர்

யாழ்ப்பாணம், அக். 4

குடாநாட்டில் கடந்த மூன்று வாரங்களில் கை, கால் இழந்த பொது மக்களின் எண்ணிக்கை 54 ஆக உயர்ந்துள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கோட்டை, மண்டைதீவு, பாந்தன், கிளிநொச்சி. முல்லைத்தீவு பகுதிகளில் மிதி வெடிகளிலும், விமானத் தாக்குதல்களிலும் சிக்கி இவர்கள் கை, கால்களை இழந்துள்ளனர்.

யாழ். செஞ்சிலுவைச் சங்கம் ஜெனீவா தலைமையகத்திற்கு அனுப்பியுள்ள வாராந்த அறிக்கையில் இவ் விவரம் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறியவந்தது. [உ-3-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எங்களிடம் பீக்களை, எவசில்வர், அலுமினியப் பாத்திரங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு; பிள்ளையார் மெற்றல் வேக்ஸ் இல 7 கைலாசபிள்ளையார் கோவில் வீதி, நல்லூர். (14353)

எங்களிடம் பாவித்த யன்னல்கள், நிலைகள், கதவுகள் தீராந்திகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க! பார்வையிடும் நேரம் காலை 7.00 மணி முதல் பி. பகல் 2.00மணிவரையும் தொடர்பு இல 07, கைலாசபிள்ளையார் கோவில் வீதி, நல்லூர். (14354)

### தேவை

சோப் செய்வதற்குரிய உபகரணங்கள் தேவை. விண்ணப்பிக்கவும். இல. 148, C/o உதயன், யாழ்ப்பாணம், (சி-5228)

### தவறிவிட்டது

கிளிநொச்சி முரசுமோட்டையைச் சேர்ந்த பெரிய நாயகி சதிரமலை ஆகிய எனது அடையாள அட்டையும், எனது மகள் உதயதேவி சதிரமலையினுடைய அஞ்சல் அடையாள அட்டையும், கைதடிச் சந்தியில் தவறிவிட்டது எடுத்தவர்கள் P.T சற்குணம் ஓவசியர், கைதடிச் சந்தி, எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (14352)

### இடமாற்றம்

அரஸ் ஜவுளியகம் இல: 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் மண்டேலா ரேடர் (புத்தக சாலை) இல, 2, பஸ்நிலையம் ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் ஆகியன தற்போது இல, 256, பருத்தித்துறை வீதி, (நல்லூர் தேரடி முன்பாக) நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். [13938]

### போட்டோஸ்ரட்

சித்ராலயா நிறுவனம் தரமான போட்டோஸ்ரட் பிரதிகளை தற்பொழுது 351, கோவில் வீதி, நல்லூர், (சம்பன் கோட்டம் முன்பாக) என்ற முகவரியில் காலை 9.00 தொடக்கம் நண்பகல் 12 வரை செய்து தருகிறார்கள். (சி. 5227)

### TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வேலைக்கும் Fudo, Enterprises, பிரதான வீதி, மானிப்பாய், Siva Studio மேல்மாடி) (சி-5219)


## வீரமரணம்

யாழ்ப்பாணம், அக். 4

கடந்த சனிக்கிழமை மாலை பலாலியில் இருந்து கட்டுவன் பகுதியை நோக்கி ஏவப்பட்ட ஷெல் குண்டுக்கு இலக்காகி வீரமரணமடைந்த சிவதர்சன் (சண்முகம் — வவுனியா). பெண் புலிகள் அனார்கலி (வல்வெட்டித்துறை), நாயகி (கோண்டாவில்) ஆகியோருக்கு வீரவணக்கம்தெரிவித்து விடுதலைப் புலிகள் அறிக்கை வெளியிட்டுள்ளனர். (உ)

# 3 ஆம் கட்ட இலவச நிவாரணம்

## அடுத்த வாரம் முதல்

யாழ்ப்பாணம், அக் 4

குடாநாட்டில் இடம்பெயர்ந்தோர், தொழில், வருமானம் இழந்தோர் ஆகியோருக்கான மூன்றாம் கட்ட இலவச நிவாரணம் அடுத்த வாரம் முதல் வழங்கப்பட இருக்கிறது.

இரண்டாம் கட்ட விநியோகம் இம்மாதம் 7 ஆம் திகதி முடிவடைந்த பின்னர், உணவுப் பொருள்களின் கையிருப்பைப் பொறுத்து மூன்றாம் கட்ட நிவாரணம் வழங்கப்படும்.

எதிர்வரும் 10 ஆம் திகதி இந்த நிவாரணம் தொடர்பாக கூட்டப்படும் கூட்டத்தை அடுத்து உடனடியாக திட்டம் அமுலாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## ரயர் எரிப்பது நிறுத்தம்

யாழ்ப்பாணம், அக். 4

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்திய சாலையை சுற்றி செவ்வாய் தொடக்கம் சிலுவை அடையாளமிடப்பட்ட "ரியூப் பல்புகள்" எரிய விடப்பட்டுள்ளன.

ஆகாயத் தாக்குதல்களிலிருந்து வைத்தியசாலையை பாதுகாக்கும் பொருட்டே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை தினமும் ஆஸ்பத்திரியைச் சுற்றி ரயர்கள் எரியவிடப்பட்டன.

ரயர் எரிக்கப்படும் போது எழும் புகையினால் நோயாளிகளும், ஆஸ்பத்திரி ஊழியர்களும், பாதிக்கப்பட்டதை அடுத்தே ரயர் எரிப்பது நிறுத்தப்பட்டு புதிய நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. (அ-9)

## வெளிமாவட்ட ஆசிரியருக்கு போக்குவரத்து வசதி

### தமிழர் ஆசிரியர் சங்கம் முயற்சி

யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள வெளிமாவட்ட ஆசிரியர்கள் மீளத் தமது வேலைக்குத் திரும்புவதற்குத் தேவையான போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்து கொடுக்க தமிழர் ஆசிரியர் சங்கம் முயற்சி எடுக்கவிருக்கிறது.

செவ்வாய் காலை வெளிமாவட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்று நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெற்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்த ஆசிரியர்கள் தமது போக்குவரத்து நிலை குறித்து அக்கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தனர்.

கூட்டத்தில் கலந்துகொண்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் திரு. மூர்த்தி, ஆசிரியர்கள் தமது பகுதிகளுக்கு சென்று கடமையாற்றவேண்டிய உதவிகளை வழங்குவதாக உறுதி கூறினார். (உ-3-6)

## விடுவிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், அக். 4

பாஷையூர் கடற்கரைப் பகுதியில் வைத்து சென்றமாதம் 17ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டு இதுவரை விடுதலை செய்யப்படாத மரியதாஸ் ராஜ்குமார் (20 வயது) என்பவரை, விடுதலை செய்து உதவுமாறு அவரின் பெற்றோர் யாழ். செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். [இ-3-6]

## மண்எண்ணெய் எடுத்துவர அனுமதிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், அக் 4

யாழ் மாவட்டத்துக்கு தேவையான மண்எண்ணெயை உத்தரவு பெற்ற தனியார் முகவர்கள் எடுத்துவர அனுமதி வழங்க வேண்டும்.

பெற்றோலியம் கூட்டுத்தாபன வடபிராந்திய முகாமையாளர் திரு. சிவஞானம் யாழ் அரச அதிபரிடமும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடமும் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி வரையும் மண்எண்ணெய் எடுத்துவர தனியார் முகவர்களுக்கு அனுமதியளித்தது போன்று யாழ்ப்பாணம் வரை கொண்டு வர அனுமதிக்க வேண்டும் என்று அவர் கோரியுள்ளார். (இ-3-6)

## நூலகம்

யாழ்ப்பாணம், அக். 4

கல்வியங்காட்டில் அமைந்துள்ள ஆலால சுந்தரம் மண்டபத்தில் தமிழ்த்தாய் மன்றத்தினரின் நூலகம் ஒன்று இயங்கி வருகிறது. நூல்களை அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் நூலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (இ - 6)

## சுன்னாகம் - மல்லாகம் பகுதிகளில் ஹெலி தாக்கு

யாழ்ப்பாணம், அக். 4

நேற்று முன் தினம் மாலை சுன்னாகம், மல்லாகம் பகுதிகளில் ஹெலியிலிருந்து பலத்த கலிபர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

வலிகாமம் வடக்குப் பகுதியில் மட்டுமே அரசின் ஊரடங்குச் சட்டம் அமுலிலிருக்கின்ற போதிலும் அதற்கு அப்பாலும் ஹெலித் தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

சுன்னாகத்தில் நடந்த தாக்குதலில் சில வீடுகள் சேதம் அடைந்தன. (இ)

## உதவி அரச அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், அக். 4

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த உதவி அரசாங்க அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணியளவில் யாழ். கச்சேரியில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் இலவச உணவு விநியோகம், அகதிகள் பிரச்சினை மற்றும் அழிந்த கட்டடங்கள் சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட இருப்பதாக யாழ். அரச அதிபர் திரு: அன்ரன் அல்பிரட் தெரிவித்தார். (இ-6)

## ஆளுநர் ஆட்சி நீடிப்பு மசோதா

## லோகசபையில் தோல்வி

பஞ்சாப் மாநிலத்தில் ஆளுநர் ஆட்சியை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்க வகை செய்யும் அரசியல் சட்டத் திருத்த மசோதா லோகசபையில் தோற்றுப் போனது.

அரசு கொண்டு வந்த இம் மசோதாவுக்கு ஆதரவாக 249 வாக்குகளும் எதிராக 3 வாக்குகளும் கிடைத்தன.

அரசியல் சட்டத்திருத்தத்துக்குத் தேவையான முழு உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் மசோதாவுக்கு கிடைக்கவில்லை.

இந்திரா காங்கிரஸ் எம்பிக்கள் வாக்கெடுப்பில் நடுநிலைமை வகித்தனர்.

பஞ்சாப்பில் ஆளுநர் ஆட்சி அடுத்த மாதம் 15 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

அங்கு சட்டசபைத் தேர்தல் நடத்தும் சூழ்நிலை இல்லாத காரணத்தினால்தான் இத்திருத்த மசோதா அரசினால் கொண்டுவரப்பட்டது. (இ-எ)

## நூலகங்களை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், அக். 4

யாழ். மாநகரசபைக்கு கீழ் இயங்கும் நூலகங்களை பொதுமக்கள் பாவனைக்கு மீண்டும் திறக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த கால நடவடிக்கைகளால் மூடப்பட்டுள்ள பொதுநூலகத்தையும், கிளை நூலகங்களையும் மீள இயக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மீள இயக்குவதற்காக கிளை நூலகங்களுக்கு பொறுப்பானவர்களையும் உதவியாளர்களையும் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இந்து விடுதியில் சமுகமளிக்குமாறு ஆணையாளர் திரு. வி. பி பாலசிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-3)

## தமிழ் அமைப்புகளுக்கு ஆயுதம்

கொழும்பு, அக். 4

விடுதலைப்புலிகளுக்கு எதிரான தமிழர் இயக்கங்களுக்கு தற்பாதுகாப்புக்காக இலங்கை அரசு ஆயுதங்களை வழங்கியிருப்பதாக தமிழ் போராளிக்குழு ஒன்றின் தலைவர் தெரிவித்தார் என்று ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவித்தது. (இ-எ)

### ரசாயன ஆயுதத் தாக்குதலைச் சமாளிக்க

## இஸ்ரவேலருக்கு முகமூடி!

ஜெருசலம், அக். 4

ஈராக் படைகள் இஸ்ரவேல் மீது ரசாயன ஆயுதத் தாக்குதலை நடத்தும் பட்சத்தில், அதில் இருந்து தனது பக்களைப் பாதுகாக்க ஒவ்வொருவருக்கும் முகமூடிகளை (Gas mask) வழங்க இஸ்ரவேல் அரசாங்கம் தீர்மானித்து உள்ளது.

முகமூடி விநியோகிக்கும் பணி அடுத்த வாரத்தின் பின்னர் ஆரம்பமாகலாம் என்று ஜெருசலம் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இஸ்ரவேலின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழும் பலஸ்தீனிய பிரஜைகளுக்கும் இம் முகமூடிகள் வழங்கப்படும் என்றும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

வளைகுடா நெருக்கடி ஒரு யுத்தமாக வெடிக்கும் பட்சத்தில், இஸ்ரவேல் மீது ஈராக் ரசாயன ஆயுதத் தாக்குதலை நடத்தலாம் என்ற பயமுறுத்தலைத் தொடர்ந்தே இம் முகமூடி விநியோகம் இடம்பெற இருப்பதாகவும் —

இதனை வைத்து இஸ்ரவேல் ஒரு யுத்தத்துக்குத் தயாராகிறது என்று எண்ணி மக்கள் பதற்றமடையக் கூடாது என்றும் ஜெருசலத்தில் அரசு அதிகாரிகள் கூறினர்.

ரசாயன ஆயுதத் தாக்குதலின்போது முகமூடிகளை எப்போது, எப்படிப் பாவிப்பது போன்ற விவரங்களும் [illegible] கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)


ஆண்டு 6 தொடங்கி 11 வரையிலான மாணவர்களின் கவனத்திற்கு

அஞ்சல் கல்விச் சேவை

[ வலிகாமம் பிரிவு ]

எமது நிறுவனத்தில் பயின்று கொண்டிருக்கின்ற, இதுவரை எமது நிறுவனத்தில் பயிலாத யாழ். மாவட்டத்தின் வலிகாமம் பகுதியில் வதியும் ஆண்டு 6 தொடங்கி 11 வரையிலான மாணவர்கள் இக் கல்விச் சேவையில் பயில விரும்பின் மாணவர்களின் பெயர்களை அவர்களது பெற்றோர்கள் / பாதுகாவலர்கள் 9-10-90 அன்று அல்லது அதற்கு முன்னதாக பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

பதிவு ஏற்றுக்கொள்ளப்படும் நேரம்
தினமும் காலை 9-00 — 12-00 மணிவரை.

★ யூனிவேர்சல் ★
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.
(சி/5229)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பங்கீட்டு அட்டை மோசடி ஒழிய.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழும் குடும்பங்களை விட பத்தாயிரம் குடும்ப அட்டைகள் கூடுதலாக விநியோகிக்கப்பட்டுள்ளனவாம்!

அதாவது குடும்பத்துக்கு ஓர் அட்டை என்ற வரையறைக்கு அதிகமாக. பல குடும்பங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட அட்டைகளைப் பெற்றிருக்கிறார்கள். ஓர் இடத்தில் இருந்து கொண்டு வேறொரு இடத்திலும் குடியிருப்பதாகப் பதிந்து, குடும்ப அட்டைகள் பெற்றிருக்கிறார்கள் என்பதே மறு அர்த்தம்.

இது பெரும் மோசடி. பொய் கூறிச் சமூகத்தை ஏமாற்றும் காரியம். பொய், ஏமாற்று, மோசடி ஆகிய மூன்றும் சேர்ந்த இச்செயல் மக்கள் கஷ்டமுறும் இக்காலகட்டத்தில் பெரும் சமூகப் பாதகங்களையும் அழிவுகளையும் உண்டாக்கும்.

உணவுப் பற்றாக்குறை ஏற்படும் காலங்களில்தான் குடும்பப் பங்கீட்டு அட்டைகள் பெறுமதி மிக்கவையாக மாறுகின்றன,

பிரகடனம் எதுவும் செய்யாமல் அரசாங்கம் வட பகுதி மீது விதித்த பொருளாதாரத் தடையின் காரணமாக என்றுமில்லாதவாறு உணவுப் பொருள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மக்களில் பலர் பட்டினிச்சாவை எதிர்நோக்கி உள்ளனர்

இத்தகைய காலங்களில், கிடைக்கும் உணவுப் பொருள்கள் போதுமானதோ, குறைவானதோ ஒவ்வொரு குடும்பத்துக்கும், தனி ஆளுக்கும் சமமாக பாரபட்சம் இல்லாமல் கிடைக்க வேண்டும். எள்ளாக இருந்தாலும் ஏழாகப் பிரித்து உண்ண வேண்டும் என்ற கோட்பாட்டின் செயல்வடிவமே குடும்பப் பங்கீட்டு அட்டை,

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலுக்காக உருவாக்கப்பட்ட பங்கீட்டு முறையைத் துஷ்பிரயோகம் செய்வது அல்லது மோசடி புரிவது என்பது பெரும் சமூகவிரோதச் செயல் என்பதில் சந்தேகம் இருக்கமுடியாது.

இந்த ஏமாற்றும், மோசடியும் சுயநலத்தின் பாற்பட்டவை. அடுத்தவன் எக்கேடு கெட்டால் என்ன. அவன் பட்டினியால் மடிந்தால் என்ன, தன்வயிறு காயக்கூடாது, தான் வயிறார உண்ணவேண்டும் என்ற சுயநலமே இதற்கு மூலகாரணம்.

ஒவ்வொருவரும் தமது சுயநலத்தைப் பார்த்துக் கொள்வது தவறு என்பதல்ல. ஆனால் பொதுநலத்துக்குக் கேடு விளைவிக்கும் சுயநலம் சமூகத்தை வேரறுத்துவிடும். தமிழர்கள் சுயநலமிகள் என்று ஏற்கனவே அவப்பெயர் கேட்டவர்கள். அதற்காக தங்கள் சொந்தச் சகோதரர்களையே பட்டினி போடும் குற்றத்தைச்செய்ய அனுமதிக்க இயலாது.

ஒன்றுக்கு மேற்பட்ட பங்கீட்டு அட்டைகள் விநியோகமானதில் அதிகாரிகளுக்கும் தொடர்பு உண்டா என்பது கண்டறியப்படுவது அவசியம். கொடுத்தவர்களும், பெற்றவர்களும் அம்பலத்துக்குக் கொண்டுவரப்பட்டு எச்சரிக்கப்பட வேண்டும். விதிப்படி சேரவேண்டிய பங்கீட்டு அட்டையையும் பறிமுதல் செய்து தண்டிக்க வேண்டும்.

### வெளியேறும் நிலையில்

# குறைந்த விலையில் உடமைகளை விற்கும் திருமலைத் தமிழர் அவலம்

திருகோணமலை, அக் 4

திருகோணமலை மாவட்டத்தில் நிலவும் பதற்றமான சூழ்நிலையை அடுத்து அங்கு காலாகாலம் வாழ்ந்து வந்த தமிழர்கள் தமது உடைமைகளை குறைந்த விலையில் விற்றுவிட்டு நகரை விட்டு வெளியேறுகின்றனர். என்று அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த சிவன்கோவிலடியில் இருந்து மடத்தடியூடாக சுண்டங்காட்டுப் பிள்ளையார் கோவில் வரையிலான முக்கிய பிரதேசத்தில் உள்ள 300க்கு மேற்பட்ட வீடுகள் புல்டோசர் போட்டு தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பிரிட்டிஷ் அரசு காலத்தில் மடத்தடிச் சந்தியில் நிர்மாணிக்கப்பட்ட தீயணைப்புப் படை அலுவலகமும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.

மடத்தடிச் சந்தியிலுள்ள அரச மரத்தின்கீழ் பொலீஸ் சென்றிபோட்டு அவசர அவசரமாக புத்தர்சிலை நிறுவ நிர்மாண வேலைகள் நடைபெறுகின்றன என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மடத்தடியில் உள்ள கிருஷ்ணர், பிள்ளையார், சனீஸ்வரன்,, மாரியம்மன். சிவன் கோவில் ஆகியவற்றின் மத்தியிலேயே இந்த புத்தர் சிலை அமைக்க முயற்சி நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது

அதேசமயம் திருமலை நகர பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக அமைந்துள்ள புதிய பஸ் நிலையப் பகுதியைச் சுற்றி அவசர அவசரமாக சிங்களவர்கள் கடைகள் அமைத்துவருகின்றனர் எனவும் அறியவருகிறது.

வழமையைவிட பிக்குமார்களும் கூடுதலாக அங்கு இராணுவத்தினருடன் நடமாடுகிறார்கள்.

இதனால் தமிழர் பீதி அடைந்து வீடுகளை விட்டு வெளியேறுகிறார்கள்.

(இ 6-3)

# தபாலகங்கள் இயங்கவில்லை; பொதுமக்கள் பெரும் பாதிப்பு

கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் நிலமை சீரடைந்தபோதிலும் அப்பகுதி தபாலகங்கள் இன்னும் இயங்கத் தொடங்கவில்லை.

இதனால் பொது மக்கள் தபால் விநியோகம் இன்றி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்

இவை மூடப்பட்டிருப்பதால் கொழும்பில் இருந்து லொறிகள் மூலம் அனுப்பப்பட்ட கிளிநொச்சி மாவட்ட தபால் பொதிகளும் பூநகரி தபால் நிலையத்திலேயே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவை இயங்காத காரணத்தினாலேயே கிளிநொச்சி மாவட்ட ஜி சி ஈ. சாதாரணதர பரீட்சை முடிவுகளும் இன்னும் கிளிநொச்சி பரீட்சார்த்திகளுக்கு கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. யாழ் தபாலகத்தில் இவை தேங்கிக்கிடக்கின்றன.

(இ)

## தென்மராட்சி கொத்தணி அதிபர் கூட்டம்

யாழ்ப்பாணம், அக். 4

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட கொத்தணி அதிபர்கள் மற்றும் உதவியாளர்களை நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்துக்குச் சமுகமளிக்கும்படி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. தனஞ்செயன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வரும்போது தென்மராட்சி கோட்டத்திலுள்ள ஆசிரியர்களின் விவரங்களையும், பாடசாலைகளுக்குத் தேவையான ஆசிரியர்களின் விவரங்களையும் எடுத்து வரும்படியும் கோரப்பட்டுள்ளது. [இ - 9]

## மின்மாற்றி "ஒயில்" திருடியவர்

உரும்பிராய், அக். 4

மின் மாற்றி "ஒயில்" திருடினார் என்று கூறப்படும் ஒருவர் விடுதலைப்புலிகளின் உரும்பராய் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டார்

இரவுக்காவலில் ஈடுபட்டிருந்த உரும்பராய் இளைஞர்கள் இவரைப்பிடித்து விடுதலைப்புலிகள் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தனர்.

கோண்டாவிலைச் சேர்ந்த இவர் சுன்னாகத்தில் இருந்து மின் மாற்றி ஒயிலை திருடி வந்தார் என்று கூறப்படுகிறது. (இ)

## காந்தி ஜெயந்தி

காந்தி ஜெயந்தி தினம் செவ்வாயன்று இந்தியா முழுவதும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது

(உ-5)

# தவித்த முயல் அடிக்கும் கயவர் இன்னும் எம்மத்தியில்!

யாழ்ப்பாணம், அக். 4

இத்தனை சோதனைகளின் பின்னரும், மற்றவர்களின் வேதனையில் சொந்த லாபம் தேடும் பேர்வழிகள் இன்னமும் எம் மத்தியில் வாழ்கிறார்கள்.

ஆகஸ்ட் மாத இறுதி வாரத்தில் மண்டை தீவில் இராணுவம் புகுந்ததும், அதன் பின் அங்கு நடந்த அட்டகாசங்களும், அழிப்புகளும், மக்கள் பலர் கொலையுண்டதும், ஏராளமானோர் அங்கிருந்து இடம் பெயர்ந்து வேறு கிராமங்களுக்குச் சென்றதும் கடந்து போன சம்பவங்கள்.

24-08-1990இல் அந்தக் கடற்கரைக் கிராமத்தில் இராணுவம் திடீரெனப் புகுந்ததும் மக்களில் பலரும் உடுத்த உடுப்புடன் தமது வீடுகளை விட்டு வெளியேறினர்.

இப்படி வெளியேறியவர் சிலர் பாதுகாப்பான வீடு என்று கருதப்பட்ட அயலில் உள்ள வீடு ஒன்றில் தமது பெறுமதி வாய்ந்த உடமைகளை ஒப்படைத்து விட்டுச் சென்றிருந்தனர்.

இராணுவம் மண்டைதீவு வந்தபோது அந்த வீட்டில் இராணுவ அதிகாரி ஒருவர் தங்கி இருந்ததால் அங்கிருந்து எந்தப் பொருளும் சூறையாடப்படவில்லை. ஆனால் இராணுவம் வெளியேறிய பின்னர் அயலவர்கள் பலரின் பெறுமதியான பொருள்களை வீட்டுக்காரர் தமதாக்கிக் கொண்டனர்.

சந்தேகம் கொண்ட பலர் வீட்டைத் திறந்து காட்டுமாறு அவரிடம் கேட்டனர். அவர் மறுத்துவிட்டார் விடுதலைப் புலிகளிடம் முறையிடப்பட்டது.

அவர்கள் வந்து சோதனையிட்ட போது பிறரின் பொருள்கள் பல அங்கிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டனவாம்.

இராணுவம் வருவதற்கு முன்னரே பக்கத்து வீட்டுக்காரர் அவரிடம் அடைக்கலமாகக் கொடுத்த தொலைக்காட்சிப் பெட்டியின் உதிரிப்பாகங்களை மாற்றி அவர் தமதாக்கிவிட்டார்.

அந்தப் பக்கத்து வீட்டுக்காரர் இராணுவக் கெடுபிடியால் தமது குடும்ப அங்கத்தவர்கள் ஐவரை இழந்ததோடு அவரது வீடும் எரிக்கப்பட்டது.

தவித்த முயல் அடிக்கும் கயவர்கள் இன்னும் எம்மத்தியில் இருக்கவே செய்கிறார்கள்! (அ)

# கண் சிகிச்சை முகாம்

மயிலணி, அக் 4

குருப்பசிட்டி சன்மார்க்க சபையினரும் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரும் இணைந்து சுன்னாகம் மயிலணியில் கண்பரிசோதனை செய்து இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் சேவையில் ஈடுபட்டனர் எழுபது பேர் வரை இந்த இலவசக் கண்ணாடிகளைப் பெற்றனர்.

வைபவத்துக்கு சன்மார்க்க சபைத் தலைவர் கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமை வகித்தார். சுன்னாகம் லயன்ஸ் கழகத்தலைவர் சட்டத்தரணி எஸ். பி. சிவஞானம் அங்குரார்ப்பண உரை நிகழ்த்தினார். லயன் ம வட்டத்தலைவர் லயன் எம். இரத்தினம் முதல் அன்பளிப்பைச் செய்தார். (இ-89)

# பொருள்களுடன் வாகனங்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் அத்தியாவசியப் பொருள்கள் தற்போது தாராளமாக வரத் தொடங்கியுள்ளன.

தினமும் யாழ். குடாநாட்டுக்கு அரிசி, மா, சீனி மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் வரும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இதனால் குடாநாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு நிலவிய தட்டுப்பாடு நீங்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது உணவுப் பொருள்களின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளது. இதே வேளை- மலை நாட்டு மரக்கறி வகைகளும் தற்போது இங்கு விற்பனையாகின்றன. (இ-6)

# மக்கள் முழுதாக இணைந்தால் முழுத் தமிழ் மண்ணும் மீட்பு

## வாஞ்சிநாதன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், அக். 4

மக்கள் முழுமையாக எம்முடன் இணைந்து செயற்பட்டால் கோட்டையில் இருந்து விரட்டியதுபோல் தமிழ் மண்ணில் இருந்தே எதிரிகளை விரட்ட முடியும். தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டத்தளபதி பானுவின் தலைமையில் கோட்டையை மீட்டுக் கொடியைப் பறக்க விட்ட சரித்திரத்தை எதிர்காலச் சந்ததியினர் பாடப் புத்தகங்களில் படிக்கப் போகிறார்கள்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகக் கைலாசபதி கலையரங்கில், நடைபெற்ற ஒன்பது வேங்கைகளின் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் முக்கியஸ்தரும், கவிஞருமான திரு. வாஞ்சிநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் தலைமையில் நடைபெற்ற மேற்படி அஞ்சலிக் கூட்டத்தில், அவர் தொடர்ந்து கூறியதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை உலகின் தலைசிறந்த விடுதலைப் போராட்டத் தலைவன் என்று வெளிநாட்டவர்கள் தெரிவு செய்திருக்கிறார்கள். இது இம் மண்ணில் வாழும் 40 இலட்சம் தமிழர்களுக்கு மட்டுமல்ல; உலகில் வாழும் சுமார் ஏழரைக் கோடித் தமிழர்களுக்குமே பெருமை தரக்கூடியது

இப்படி அவர் கூறினார். (இ)

# கொழும்பிலிருந்து வருவோரும் வவுனியா முகாமில் தடுத்துவைப்பு!

கொழும்பிலிருந்து வட பகுதி நோக்கிவரும் தமிழ்ப் பயணிகளும் வவுனியாவில் அரசால் அமைக்கப்பட்டுள்ள அகதிகள் முகாமில் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

கடந்த திங்கள் - செவ்வாய்கிழமைகளில் பலர் இப்படித் தடுத்து வைக்கப்பட்டனர்.

கொழும்பிலிருந்து வந்த தமிழ்ப் பயணிகள், வெளிநாட்டிலிருந்து வந்த பயணிகள் என வேறுபடுத்தப்பட்டு [illegible] பட்டனர் என்றும் கொழும்பிலிருந்து வந்த பயணிகள் திங்கள் மாலையே விடுவிக்கப்பட்டனர் என்றும் வெளிநாட்டிலிருந்து வந்த பயணிகள் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

— அத்துடன் இந்த முகாமில் உணவுக்கென பணமும் பயணிகளிடம் இருந்தே அறவிடப்படுகிறதாம். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குமரப்பா - புலேந்திரன் உட்பட

# 12 போராளிகளுக்கு நாளை தீருவிலில் அஞ்சலிக் கூட்டம்

வீரமரணம் அடைந்த லெப்டினன்ட் கேர்ணல் குமரப்பா லெப்டினன்ட் கேர்ணல்புலேந்திரன் உட்பட 12 வேங்கைகளின் மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டிய எழுச்சி ஊர்வலமும் அஞ்சலிப்பொதுக் கூட்டமும் நாளை 5 ஆம் திகதி நடைபெறுகின்றன.

நாளை பிற்பகல் மூன்று மணியளவில் நெல்லியடிமுத்த விநாயகர் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பிக்கப்படும் எழுச்சி ஊர்வலம் பன்னிரு வேங்கைகளின் நினைவுத்தூபிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள வல்வை தீருவில் வெளியைச் சென்றடையும்.

தீருவில் வெளியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, மகளிர் முன்னணி, ஆகியவற்றின் முன்னணிப் பிரமுகர்கள் கலந்து கொள்ளும் அஞ்சலிக் கூட்டமும் இடம்பெறும்.

அஞ்சலிக் கூட்டத்திற்கு வருகை தருபவர்களுக்கு வாகன வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

# ஆய்வு நிறுவனக் கூட்டம்

யாழ்ப்பாணம், அக். 4

பொறியியலாளர்கள், கட்டடக் கலைஞர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் மற்றும் யாழ் மாநகரசபை எல்லைக்குள் அடங்கும் யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள கிராமசேவை உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை 5ஆம் திகதி நடைபெறுகிறது.

நாளை காலை 8-30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அனைவரையும் தமிழீழ ஆய்வு நிறுவனம் கோரி உள்ளது.

பின்வரும் திணைக்களங்கள், அமைப்புகளைச் சேர்ந்த பொறியியலாளர்கள், கட்டடக் கலைஞர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் நாளைய கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை மின்சார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, பெருந்தெருக்கள் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகார சபை, கட்டடத் திணைக்களம் தொலைத் தொடர்புத் திணைக்களம். உள்ளூர் ஆட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கல்வித் திணைக்களம், யாழ் மாநகர சபை, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கச்சேரி, யாழ். பல்கலைக்கழகம், காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை, லங்கா சிமெந்துத் தொழிற்சாலை.

# காங்கேசன் துறைமுகத்தை ஒப்படைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம். அக். 4

கப்பல்களில் வரும் பொருள்களை இறக்க வசதியாக காங்கேசன்துறை துறைமுகத்தை தங்களிடம் ஒப்படைக்கும்படி பாதுகாப்பு அமைச்சிடம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவும், யாழ் செஞ்சிலுவைச் சங்கமும் கோரிக்கை விடுத்துள்ளதாக அறிய வருகிறது.

தற்போதைய ஏற்பாடுகளின் படி பருத்தித்துறைக் கடலில் வைத்து கப்பலில் இருந்து பொருள்களை இறக்க போதிய வசதிகள் இல்லை என்றும் —

இதனால் உணவுப் பஞ்சம் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளதாகவும் —

கூடுதல் பொருள்களுடன் வரும் கப்பல்களில் இருந்து விரைவாகப் பொருள்களை இறக்க வசதியாக காங்கேசன் துறை துறைமுகத்தைத் தங்களிடம் ஒப்படைக்குமாறும் அவர்கள் கோரியுள்ளனர். (உ-3-5)

## கொத்தணி அதிபர் கூட்டம்

மருதனார்மடம் கோட்ட கொத்தணி அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 10 00 மணியளவில், மருதனார்மடம் உதவிக் கல்விப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறும். (இ 6)

# மரண அறிவித்தல்

## திருமதி விஜயவாணி பிரேம்நாத்

அத்தியடியைச் சேர்ந்த திருமதி விஜயவாணி பிரேம்நாத் 03 10-1990 புதன்கிழமை காலமானார்.

இவர் திரு. சோ. பிரேம்நாத் (ஆசிரியர் - உடுவில் மகளிர் கல்லூரி, நியூ சயன்ஸ் அக்கடமி) அவர்களின் அன்பு மனைவியும், திரு. திருமதி குமாரசாமி அவர்களின் அன்பு மகளும், கணேஸ்வரன் (London) விஜயலக்சுமி (கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி) அவர்களின் அன்புச் சகோதரியும், திருமதி சோமசுந்தரத்தின் அன்பு மருமகளுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 04-10-1990 வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு இல. 70, அத்தியடி புதிய வீதியில் இருந்து தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோ. பிரேம்நாத்

''லக்சுமி பவனம்''
இல. 70, அத்தியடி புதிய வீதி,
யாழ்ப்பாணம்.

[13876]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 04-10-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

## இணுவில் பாடசாலை ஆசிரியர் கூட்டம்

யாழ்ப்பாணம். அக் 4

இணுவில் சைவ மகாஜன வித்தியாலயம், இணுவில் அமெரிக்கன் மிசன் த. க பாடசாலை ஆகியவற்றை மீள இயக்குவது சம்பந்தமாக ஆராய்வதற்காக இரு பாடசாலைகளையும் சேர்ந்த ஆசிரியர்களையும் இன்று வியாழக்கிழமை காலை ஒன்பது மணிக்கு சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ-3)

## மா கப்பல் வந்தது

யாழ்ப்பாணம், அக் 4

திருகோணமலையில்இருந்து 450 மெற்றிக் தொன் மாவுடன் 'சிகிரியா' கப்பல்நேற்று பருத்தித்துறை வந்து சேர்ந்தது. [உ-3]

## ஐக்கிய ஜேர்மனி: பெரிய நாடு

பெர்லின், அக். 4

கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் செவ்வாய் நள்ளிரவு ஒரே நாடாக ஐக்கிய ஜனநாயக ஜேர்மனியாக இணைந்தன.

45 ஆண்டுகளுக்குப் பிறகு இணைந்துள்ள ஐக்கிய ஜேர்மனி ஐரோப்பாவின் பெரிய நாடாக விளங்கும்.

இந்த இணைப்பை அடுத்து 86 வெளிநாடுகளில் இருந்த கிழக்கு ஜேர்மன் தூதராலயங்களும் நேற்று மூடப்பட்டன. (அ-5)

## திரும்புகின்றனர்

யாழ்ப்பாணம், அக். 4

யாழ். முஸ்லிம் வட்டாரத்தில் இருந்து இடம் பெயர்ந்து சென்றிருந்த முஸ்லிம்களில் பெரும்பாலனோர் மீண்டும் தமது இடங்களுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர்.

சாவகச்சேரி, மஞ்சும்பான் பகுதிகளில் உள்ள பள்ளிவாசல்களில் சென்று அகதிகளாகத் தங்கியிருந்தோரே இவ்வாறு திரும்புகின்றனர்.

ஸ்ரீலங்கா விமானப்படையின விமானத் தாக்குதல்களினால் யாழ்-முஸ்லிம் வட்டாரப் பகுதி அதிகம் பாதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (உ-6)

## மின் இணைப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புக்குப் பதிலாக 33 கே வி. மின் இணைப்புகள் ஊடாக குடாநாட்டிற்கு சுழற்சிமுறை மின்சாரத்தை வழங்கும்முயற்சியாகவே இந்தத் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-9]

## யாழ்.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட சிற்றூழியர்கள் இவ்வேலைதனை நேற்று மேற்கொண்டனர்.

விமானத் தாக்குதல்களினால் யாழ் ஆஸ்பத்திரியின் மருந்துக் களஞ்சியம் உட்பட அதிதீவிர சிகிச்சைப் பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு, டாக்டர்களின் விடுதி, ஆஸ்பத்திரிக் காரியாலயம் முதலியவை பாவிக்க முடியாத நிலைக்கு பலத்த சேதமுற்றிருக்கின்றன.

சேதமுற்ற ஆஸ்பத்திரிப் பகுதிகளை வீடியோப் படம் எடுக்கும் நடவடிக்கையும் நேற்று ஆஸ்பத்திரி நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

இதேசமயம் —

சேதமுற்ற யாழ் ஆஸ்பத்திரியைத் திருத்தும் வேலை [illegible] விருப்பதாக அறியவந்தது. (உ-15)

# கொள்ளையர் தாக்கிய பெண் ஐந்து நாள் மயக்கநிலையில்

கொள்ளையர்களின் தாக்குதலுக்கு ஆளான பெண்மணி ஒருவர் கடந்த ஐந்து தினங்களாக மயக்க நிலையில் உள்ளார்.

யாழ்ப்பாணம் கோவில் வீதியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை மேரிமுத்து [வயது 56] என்பவரே கொள்ளையர்களின் தாக்குதலுக்கு ஆளானார்.

கடந்த சனிக்கிழமை அதிகாலை 3 மணியளவில் அவரது வீட்டில் புகுந்த கொள்ளையர்கள், அவரைப் பொல்லால் தாக்கிவிட்டு அங்கிருந்த பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

பெண்மணியின் கணவர் மலசல கூடத்திற்குச் சென்றிருந்த சமயம் பார்த்துக் கொள்ளையர்கள் வீட்டுக்குள் புகுந்ததாகச் சொல்லப்படுகிறது.

கொள்ளையடிக்கப்பட்ட வீடு செஞ்சிலுவைச்சங்கச்சர்வதேசக் குழு அலுவலகத்திற்குச் சமீபமாக அமைந்துள்ளது. [அ-5]

# வலி.வடக்கில் ஹெலி தாக்கு!

நேற்று நண்பகல் கட்டுவன், பலாலி, வயாவிளான் பகுதிகளில் ஹெலி வட்டமிட்டு சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவிலும் மல்லாகம், தெல்லிப்பளைப் பகுதிகளில் ஹெலித் தாக்குதல்கள் இடம்பெற்றன. (உ-68)

# காங்கேசன் பகுதியில் பீரங்கித் தாக்குதல்!

காங்கேசன்துறை, அக். 4

காங்கேசன்துறை கடற்பகுதியில் தரித்துநிற்கும் பீரங்கிக் கப்பலில் இருந்து நேற்று முன்தினம் இரவு கடும் பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

காங்கேசன்துறை, மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி ஆகிய பகுதிகளில் இந்தப் பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடித்தன, இடையிடையே ஷெல் பிரயோகமும் இடம்பெற்றது. (உ-68)

# தபால் பொதிகள் நேற்று தரம் பிரித்து விநியோகம்

யாழ்ப்பாணம், அக் 4

நேற்று முன்தினம் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த கப்பலில் இருந்து இறக்கப்பட்ட தபால் பொதிகள் அனைத்தும் சுன்னாகம் தபாலகத்தில் வைத்து தரம் பிரிக்கப்பட்டு உரிய தபாலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளுக்குரிய தபால்கள் முப்பது பொதிகளில் தரம் பிரிக்கப்பட்டு யாழ் பிரதம தபாலகத்தில் நேற்று ஒப்படைக்கப்பட்டன.

தபால்களைத் தரம் பிரித்து ஒப்படைக்கும் வேலையில் நேற்று முன்தினமும், நேற்றும் சுன்னாகம் தபாலகம் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்தது.

சுன்னாகம் பகுதிக்குரிய தபால்களும் பூரணை விடுமுறை தினமாகவிருந்த போதிலும் சுன்னாகம் தபாலகத்தினால் உரிய விலாசதாரர்களுக்கு நேற்றே விநியோகிக்கப்பட்டன. (உ)

# பி.டி. உஷா ஓய்வு பெறுகிறார்

பீக்கிங், அக் 4

இனி உலகப் போட்டிகளில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று இந்தியாவின் பிரபல ஓட்டப்பந்தய வீராங்கனை பி. டி. உஷா அறிவித்திருக்கிறார்.

இப்போது பீக்கிங்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பி. டி. உஷாவினால் மூன்று வெள்ளிப் பதக்கங்களை மட்டுமே பெற முடிந்தது.

கடந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பி. டி. உஷா நான்கு தங்கப்பதக்கங்களைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-எ]

# ஆஸ்பத்திரியில் பாதுகாப்பு

யாழ். போதனா ஆஸ்பத்திரியில் பொருள்கள் களவு போவதைத் தடுப்பதற்கு பாதுகாப்பு ஊழியர்களை கடமையில் ஈடுபடுத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விமானக் குண்டுவீச்சினால் சேதமுற்ற யாழ். ஆஸ்பத்திரிக் கட்டடத்தின் கதவுகள் பலவும் திறந்த நிலையில் காணப்படுகின்றன. இதனால் அங்கிருந்து பொருள்கள் களவாடப்படுவதாகத் தெரியவந்திருக்கிறது.

பாதுகாப்பு ஊழியர்களுடன், யாழ் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களும் இணைந்து பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3-5)

# மருந்துக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், அக். 4

மானிப்பாயில் இயங்கும் யாழ். ஆஸ்பத்திரியில் விசர் நாய்க்கடி மருந்து உட்பட முக்கியமான மருந்துவகைகள் பலவற்றுக்கு கடந்த இருவாரமாக பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநோயாளர்கள்,தேவையான பல மருந்து வகைகளை வெளியிலேயே வாங்கி உபயோகிக்க வேண்டியுள்ளது.

கிளினிக் நோயாளர்களுக்கு மாதாந்த அடிப்படையில் வழங்கப்பட்டு வந்த மருந்து வகைகள் கூட தற்போது ஒரு கிழமைக்கே வழங்கப்படுகின்றன. (உ-15)

## விலை வீழ்ச்சி

யாழ் குடாநாட்டில் மண்ணெண்ணெயின் விலை மேலும் வீழ்ச்சி அடைந்துள்ளது. நேற்றுமண்எண்ணெய் போத்தல் 16 ரூபாவுக்கு விற்பனையானது. (உ-6)

## அம்பாறை...

நால்வரின் சடலங்கள் திருக்கோவில் இராணுவ முகாம் அருகிலும், வேறு 4 தமிழரின் சடலங்கள் பனங்காடு என்னும் இடத்திலும் காணப்பட்டன என்றும் ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org